## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 421/2016 மற்றும் 424/2016** **நாள். 30.11.2023**

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ம் நாள் மனுதாரர் தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜா | தொழில் | |
| த. பெ./க.பெ. | குப்பன் | சாதி | |
| கிராமம் | காட்டுசித்தாமூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 48 |

**ம..சா.3**

**குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத, படிக்க தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. விபத்தில் இறந்த அசோகன் என்பவரின் தந்தை என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார். விபத்தில் இறந்த அசோகன் மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் எனக்கு உறவினர்கள் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தில் வந்த மணிகண்டன் , விஜயகுமார் , அசோகன் ஆகியோர் எங்கு சென்றார்கள் என்றும், எங்கியிருந்து வந்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. நான் நின்று கொண்டிருந்த பட்டறை கடலாடி குளம் கூட்ரோட்டில் இருந்து சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். கடலாடிகுளம் கூட்ரோடு ஜனம் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். கடலாடிகுளம் கூட்ரோட்டில் போலிசார் தடுப்பு வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்தவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். கையெழுத்து வாங்கவில்லை. லாரியை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள். கரும்பு லாரி ஓட்டுநர் மீது தவறு இல்லை என்றாலும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் கவனகுறைவாக விபத்தை ஏற்படுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல.